# ராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார்



**நாமக்கல்,ஜூலை.16-**
தமிழ்நாடு முதலமைச்சர் (15.07.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உங்கள் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 238 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி, 30.09.2025 வரை பல்வேறு கட்டங்களாக 40 நாட்கள் நடைபெறுகிறது. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கடைகோடி மக்களுக்கும், நாள்தோறும் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்களை வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். சுமார் 977 தன்னார்வலர்கள் மூலம் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள் / இடம் குறித்த விவரங்கள், வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள் / சேவைகளை விவரித்து அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேடு மற்றும் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் அனைவரும் இந்த திட்டத்தின் மூலம் நடைபெறும் முகாமினை பயன்படுத்தி பயன்பெறலாம்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம், தொழில் மேம்பாடு திட்டத்தின் கீழ், 289 புதிய மற்றும் பழைய தொழில் முனைவோர்களுக்கு ரூ.3 கோடியே 87 லட்சம் மதிப்பில் தொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது

## நிறைந்தது மனம் நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பயனடைந்தோர் நன்றி

**கிருஷ்ணகிரி,ஜூலை.16-**
கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், சிகரலப்பள்ளி ஊராட்சியில், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் இணை மானிய திட்டத்தின் கீழ் பயன்பெற்று கார்மெண்ட்ஸ் தொழில் மேற்கொண்டு வரும் எபி.ஸ்போர்ட்ஸ் பயனாளிகளிடம் கலெக்டர்ச.தினேஷ் குமார் 03.07.2025 அன்று "நிறைந்தது மனம்" நிகழ்ச்சியின் போது கலந்துரையாடினார்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டமானது உலக வங்கி நிதியுதவியுடன் தமிழக அரசின் சிறப்பு திட்ட செயலாக்கத்துறையின் முதன்மை திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது ஊரக பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிலையான வருமானத்தை ஏற்படுத்தவும், அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும், பெண்களை முன்னிலைப்படுத்திய நிறுவனங்கள் உருவாக்க நிதி உதவி செய்திடவும், வேலை வாய்ப்பினை பெருக்கிட உதவுவதாகும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி துறையின் கீழ், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், கடந்த 5 ஆண்டுகளாக பர்கூர், கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டிணம் ஒன்றி






யங்களில் உள்ள 102 ஊராட்சிகளில் செயல்பட்டு வருகிறது. தொழில் மேம்பாடு திட்டத்தின் கீழ், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் செய்து வரும் 7,604 உழவர் உற்பத்தியாளர்களை கொண்டு 122 உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்களுக்கு தலா ரூ.75,000 வீதம் ரூ.91 இலட்சத்து 50 ஆயிரம் துவக்க நிதி மானியமும், 979 தொழில்முனைவோர்களை உள்ளடக்கிய 45 தொழில் குழுக்களுக்கு தலா ரூ.75,000 வீதம் ரூ.33 இலட்சத்து 75 ஆயிரம் துவக்க நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1,816 உழவர் உற்பத்தியாளர்களை கொண்டு ஏற்றம் மற்றும் மாஞ்சோலை என இரண்டு உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த இரு நிறுவனங்களுக்கு நான்கு தவணைகளாக தலா ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. காரகுப்பம் பகுதியில் உள்ள பழங்குடியினர் கிராம மக்களுக்கு புளி சேகரிக்கும் கிடங்கு அமைத்து தரப்பட்டுள்ளது.வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் பெருமைக்குரிய நிறுவனங்களில் ஒன்றான ஓரிட சேவை மையமான மதி சிறகுகள் தொழில் மையம் (MSTM) ஊரக தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு பல்வேறு வணிக மேம்பாட்டு ஆதரவு சேவை மற்றும் வணிக ஒருங்கிணைப்பு சேவைகளை வழங்கும்.இம்மையம் கிருஷ்ணகிரியில் ராயக்கோட்டை மேம்பாலம் அருகில் உள்ள கிராம சேவை மைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மையம் ஒருங்கிணைந்த சேவை மையமாக செயல்பட்டு, தொழில் கருத்துருவாக்கம், அரசு துறை திட்டங்கள் மற்றும் வங்கிகளில் இருந்து கடன் பெறுவதற்கான வணிகத் திட்டம் தயாரித்தல், தொழில் நடத்துவதற்கான சான்றிதழ்கள், பதிவு மற்றும் இணக்கம் பெறுதல், திட்ட மற்றும் துறை சார்ந்த



நிபுணர்களிடமிருந்து வழிகாட்டுதல் ஆதரவு, சந்தைப்படுத்துதல், பிராண்டிங் (Branding) ஆதரவு போன்ற பல்வேறு வணிக மேம்பாட்டு ஆதரவு சேவைகளை வழங்குகிறது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் இணை மானிய திட்டத்தின் கீழ், பயனடைந்து வரும் ஜீவிதா க/பெ. நரசிம்மன் தெரிவித்தாவது: (செல்:9600547610).நான் எனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் பெத்ததாளப்பள்ளி கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்நிலையில் வீட்டிலிருந்தே சிறு தொழில் மேற்கொள்ளலாம் என்று இருந்த நிலையில் மாவு, நெல் அரவை மில் அமைக்க முடிவு செய்தோம். மேலும் நவீன அரவை மில் அமைக்க அதிக நிதி தேவைப்படும். இதனால் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கப்படுவதை அறிந்து, நெல் அரவை மில் அமைக்க விண்ணப்பம் அளித்தேன். அதனடிப்படையில் எங்களுக்கு இயந்திரங்கள் வாங்க மொத்த கடனுதவியாக ரூ.9,75,000 வழங்கினர். மேலும், இத்தொகைக்கு ரூ.2,92,500 இணை மானியம் கிடைத்தது. தற்போது தானிய கல் குறுணை நீக்கும் இயந்திரத்தின் மூலம் சுத்தமான முறையில் நெல் அரவையும், அரசி மாவு, மிளகாய், தனியா, தோசை மாவு உள்ளிட்ட இயந்திரங்கள் தனித்தனியாக அமைத்துள்ளோம். நாள்தோறும் சுமார் ரூ.3000 அளவிற்கு அரவை செய்து கொடுக்கிறோம். கடன்தொகை, மின்சார கட்டணம், பராமரிப்பு செலவு போக மாதந்தோறும் ரூ.30 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கிறது. இதுபோன்று வீட்டிலிருந்து சொந்த தொழில் செய்ய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை சிறப்பாக செய்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு "நிறைந்தது மனம்" நிகழ்ச்சியில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் இணை



மானிய திட்டத்தின் கீழ், பயனடைந்து வரும் அருவி மீன் உணவுப்பொருட்கள் தயாரிப்பு குழு தலைவர் கனகா க/பெ.ஞானமணி தெரிவித்தாவது: (செல்:6369124199).நான் பெத்ததாளப்பள்ளி கிராமத்தில் 13 பெண்கள் இணைந்து அருவி மீன் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் குழுவை சிறப்பாக நடத்தி வருகிறோம். எங்கள் குழுவில் உள்ள பெண்கள் அனைவரும், எங்கள் கிராமத்திற்கு அருகிலுள்ள கிருஷ்ணகிரி அணைப் பகுதியில் நாள்தோறும் 30 கிலோ அளவிற்கு மீன்களை வாங்கி வந்து சுத்தம் செய்து மீன் வறுவல் கடைகளுக்கு விற்பனை செய்து வருகிறோம். மேலும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ், ரூ.3,75,000 கடனுதவி பெற்று இஞ்சி, பூண்டு பேஸ்ட் தயார் செய்யும் இயந்திரம், மசாலா பொருட்கள் தயார் செய்யும் அரவை இயந்திரம் வாங்கி உள்ளோம். நாங்கள் பெற்ற கடனுக்கு ரூ.90 ஆயிரம் இணை மானியமாக வழங்கி உள்ளனர். எங்கள் குழுவை சேர்ந்த பெண்கள் இஞ்சி, பூண்டு பேஸ்ட் மற்றும் மசாலா பொருட்களுடன் மீனையும் கலந்து விற்பனை செய்து வருகிறோம். மேலும் தனியாக இஞ்சி, பூண்டு பேஸ்ட் அரவை செய்ய 1 கிலோவிற்கு ரூ.15 வாங்கி வருகிறோம். இந்த தொழில் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. எங்களைப் போன்ற கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில்வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**தொகுப்பு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

# வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் உழவரைத்தேடி வேளாண்மை-உழவர் நலத்துறை திட்ட சிறப்பு முகாம்



**கிருஷ்ணகிரி,ஜூலை.16-**
கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் உழவரைத்தேடி வேளாண்மை- உழவர் நலத்துறை திட்டம் சிறப்பு முகாம் வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் பீமாண்டப்பளளி கிராமத்தில் நடைப்பெற்றது. இம் முகா மிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தொடங்கி வைத்து வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

இந்த பயிற்சியின் போது, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பையூர், திலகம் (பூச்சியியல்) பங்கேற்று நெல் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, நோய் மேலாண்மை, உயிர் உர விதை நேர்த்தி செய்தல், மண்புழு உரம் தயாரித்தல், திருந்திய நெல் சாகுபடி, களை மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விளக்கம் அளித்தார். வேப்பனப்பள்ளி துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன் கலந்துக் கொண்டு இயந்திர நடவு முறையில் நெல் நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 1 ஏக்கருக்கு ரூ.4000/-பின்னேற்பு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை முழுமையாக விவசாயிகள் பயன்பெற சிட்டா, ஆதார் அட்டை நகல், வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் புகைப்படம் போன்ற ஆவணங்களை உங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு சமர்ப்பித்து பயன்பெறலாம். நெல் சாகுபடியில் நாற்று நடவு முறையை இயந்திரமயமாக்குவதால் நடவு நேரம் குறைக்கப்பட்டு சாகுபடி செலவு குறைந்து விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும். சான்று பெற்ற நெல் பயன்படுத்துவதால் உணவு உற்பத்தி அதிகரிக்கும். உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரக்கலவை பயன்படுத்துவதால் மண்வளம் சீர்படுத்தப்பட்டு பயிர்களின் உற்பத்தி திறன் அதிகரிக்கும். இந்த பயிற்சியில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். கலந்துக் கொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு மற்றும் துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பாரதிராஜா உழவன் செயலியை பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமளித்தார்.

# காமராசர் 123வது பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாட்டம்

**தருமபுரி,ஜூலை.16-**
பென்னாகரத்தை அடுத்துள்ள செங்கனூர் ஊராட்சிக்கு உட்பட்ட சின்னப் பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் 123 வது பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் மா. பழனி தலைமையேற்று காமராசர் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார். விழாவில் தலைமையாசிரியர் பேசும்போது காமராசர் முதலமைச்சராக



இருந்தபோது அவரது தொலைநோக்கு திட்டங்கள், நாட்டு வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணிகள் குறிப்பாக கிராமப்புறங்களில் பள்ளிகள் திறக்க வேண்டும் என்பதற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சி, மதிய உணவு திட்டம், நீர்ப்பாசன திட்டம், நிர்வாக திறமை, மற்றும் அவரது எளிமை, நேர்மை உள்ளிட்டவைகளை குறிப்பிட்டார்.

பள்ளி மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டி, பேச்சு போட்டி, ஓவியப்போட்டி, வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவர்கள் காமராசரின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவர் நாட்டுக்கு ஆற்றிய சிறப்பான பணிகள் உள்ளிட்டவைகளை பற்றி பேசினார்கள். பின்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் காமராசரின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் வளர்மதி, கல்பனா திலகவதி, ராஜேஸ்வரி, அனுப்பிரியா மற்றும் சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# சேலம் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: அமைச்சர் இரா.ராஜேந்திரன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்



**சேலம்,ஜூலை.16-**
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் (15.07.2025) தொடங்கி வைத்ததைத்தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் ஒன்றான சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் ஜாகீர் ரெட்டிப்பட்டி பி.சி.சி திருமண மண்டபத்தில் திட்டத்தினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள். பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

முகாம்களில் பங்கேற்க உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் அவர்களின் உடல் நலனை காத்திடும் வகையில் மருத்துவ சேவைகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாக சென்று விண்ணப்பங்கள் மற்றும் தகவல் கையேடுகள் வழங்கி அவர்களை இம்முகாம்களில் பங்கேற்க செய்து கோரிக்கைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்ச்சியாக தமிழ்நாட்டு மக்களின் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். ஏற்கனவே பல்வேறு திட்டங்கள் வாயிலாக பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் விடுபட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் ஏற்கனவே கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வாயிலாக 5.50 இலட்சம் மகளிர் பயனடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான விதிகளில் சற்று தளர்வு ஏற்படுத்தி அறிவித்துள்ளார்கள். தற்பொழுது கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும். இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் (15.07.2025) தொடங்கி வைத்ததைத்தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெறும் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் ஜாகீர் ரெட்டிப்பட்டி பி.சி.சி திருமண மண்டபத்தில் திட்டத்தினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, , சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், உதவி கலெக்டர் (பயிற்சி) விவேக் யாதவ் வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா, உதவி ஆணையர்கள் இலட்சுமி, வேடியப்பன், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.ஜானகி உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இலக்கிய மன்றங்கள் துவக்க விழா




**ராசிபுரம்,ஜூலை.16-**
ராசிபுரம் ஸ்ரீ வித்யா மந்திர் இண்டர்நேஷனல் பள்ளியில் இலக்கிய மன்றங்களின் துவக்க விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் 10-ம் வகுப்பு மாணவி எம்.கே.கமலி வரவேற்புரையாற்றினார். பள்ளியின் சேர்மன் இன்ஜினியர் என்.மாணிக்கம் தலைமையில் சிறப்பு விருந்தினரை பள்ளியின் முதல்வர் சி.புனிதா அறிமுகம் செய்து வைத்தார். இலக்கிய மன்ற சிறப்பு விருந்தினராக முன்னாள் மாவட்ட கல்வி அலுவலர் டாக்டர் எம்.ஏ.உதயக்குமார், இலக்கிய மன்றங்களின் பொறுப்பாளர்களை அறிமுகம் செய்து சிறப்புரையாற்றினார். அவர் தம் உரையில் மாணவர்கள் அனைவரும் போட்டிகளில் பங்கு பெற வேண்டும் என்றும். எந்த ஒரு செயலையும் தன்னம்பிக்கையுடன் செயல்படுத்த வேண்டும், உங்கள் பள்ளி உங்களுக்கு 2வது வீடு உங்களுடைய வீடு உங்களுடைய 2வது பள்ளி. பள்ளிக்கூடத்தில் கருப்பு போர்டு இருப்பதை போன்று ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டும். கருப்பு போர்ட் இல்லாத வீடே இருக்கக் கூடாது. குழந்தைகள் வீட்டிற்குச் சென்ற அங்கே அந்த கருப்பு போர்டில் தங்களது கணக்கு பாடங்களை மற்ற பள்ளியில் சொல்லிக் கொடுத்தவை எழுதி பார்க்க வேண்டும். இதை பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். பெற்றோர்கள் ஒரு விஷயத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பி விட்டால் போதும் என்று நினைத்து விடுகிறார்கள் அப்படி இருக்கக் கூடாது அவர்களை உன்னிப்பாக கவனிக்க வேண்டும். பெற்றோரின் பணி ரயில் தண்டவாளம் போன்று ஒரு தண்டவாளம் பெற்றோர்கள் இன்னொரு தண்டவாளம் ஆசிரியர்கள் இவர்கள் இரண்டு பேரும் சரியாக இருந்தால்தான் அந்த மாணவனால் வாழ்க்கையில் முன்னேற்ற நிலைக்குச் செல்ல முடியும். ஆசிரியர்கள் மாணவருக்கு ரோல் மாடலாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

இவ்விழாவில் பள்ளி கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் சி.நடராஜ், சிபிஎஸ்இ பள்ளி சேர்மன் இன்ஜினியர் என்.மாணிக்கம், பள்ளியின் செயலர் வி.சுந்தரராஜன், பொருளாளர் வி.இராமதாஸ், துணைத் தலைவர் டாக்டர் எம்.இராமகிருஷ்ணன், நிறுவனத் தலைவர் டாக்டர் ஆர்.எம்.கிருஷ்ணன், கல்வியில் கல்லூரி சேர்மன். டாக்டர் கே. குமாரசுவாமி. ஆர்விஇடி செயலர் எஸ்.சந்திரசேகரன், இணை செயலர் வி.பாலகிருஷ்ணன், இயக்குநர் ஆர். பெத்தண்ணன், சிபிஎஸ்இ பள்ளி முதல்வர் சி.புனிதா, மெட்ரிக் பள்ளி முதல்வர் டாக்டர் பி.கிருஷ்ணமூர்த்தி, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், கலந்துகொண்டனர். இறுதியில் மாணவன் பி.மோனிஷ் பிரசன்னா நன்றியுரை யாற்றினார்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

